பிஸ்மில்லாஹி.

# அஷ்காலேபருத்து

எனும்

பராஅத்து இரவில் செய்யக்கூடிய விசேஷ அமல்கள்

946
297

---

இதை அநேக கிதாபுகளில் இருந்து எடுத்து கோர்வையாக்கப்பட்டது.

---

இதை

எ. அப்துல் கறீம் சாயபு என்பவரால்

தமது

கறீம்பீடி அச்சியந்திரசாலையில் அச்சிட்டு

வெளிப்படுத்தப்பட்டது

---

இது வேண்டியவர்கள்

கிழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால்

இலவசமாக அனுப்பப்படும்

---

எ. அப்துல்கறீம் சாயபு,

பிரஸ், செம்புதாஸ் தெருவு,

மதராஸ்.

---

1926.

Q7
N26
176453

1064

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# ஷஅபான் மாதம் பராஅத்து இரவில் செய்யவேண்டிய விசேஷ அமல்களின் வரிசைகள்.

ஹதீஸ் ஷரீபில் அபூபக்கர் லித்தீக் (ரலி) வை தொட்டு வந்திருக்கிறது. நாயகம் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். யாதெனில், ஓ ஜனங்களே! ஷஅபான் மாதம் 15-ந்தேதி இரவில் நின்று வணக்கம்புரியுங்கள். அந்த இரவு மிக்க பரக்கத்து செய்யப்பட்ட ஓர் இரவேயாகும். அல்லாஹுத்த ஆலா அந்த இரவில், ஆ எனது அடியார்களே! உங்களில் நின்றும் ஒருவன் இந்த இரவில் என்னிடம் பிழைபொருக்கத்தேடுவானேயாகில், நான் அவனது பாவங்களை பிழைபொருப்பேன் என்று சொல்லுகிறான். ஆனதைப்பற்றி, ஷஅபான் 15-ம் இரவானது மிக்க மேன்மையும் சிறப்பும் பொருந்திய ஓர் இரவாயிருக்கும். அதில், ரஹ்மத்துடைய மலாயிக்கத்துகள் இறங்குகிறார்கள். ஆகவே, எவர்கள் அந்த இரவில் விழித்து (இபாதத்து) வணக்கம் செய்கிறார்களோ, அவர்கள் அல்லாஹுத்த ஆலாவுடைய சன்னிதானத்தில் பாவங்களை மன்னிக்கப்பட்டவர்களாகவும், சௌக்கியத்தையும், ஆரோக்கியத்தையும் பெற்று நல்ல அதிர்ஷ்டசாலிகளாகிவிடுவார்கள். இன்னும் நாயகம் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். எவனொருவன் நரகத்தைவிட்டும் ஈடேற்றம் பெற நாடுவானேயாகில், அவன் ஷஅபான் மாதம் 15-ம் இரவில் விழித்து வணக்கம் செய்யவும், அவன்பேரில் அல்லாஹுத்த ஆலா தனது வரிசையினாலும் கிருபையினாலும் நரகத்தை ஹராமாக்கிவிடுவான் என்று. ஆகவே, இந்த இரவில் இபாதத்துவுடையோன் நீயத்து வைத்து குளித்து உலுவு செய்து (தஹீயத்தல் உலு) வின் நீய்யத்துவைத்து இரண்டு ரகாஅத்து நபில் தொழுகவும், ஒவ்வொரு ரகாஅத்திலும் (சூரத்து பாத்திஹா) அதாவது அல்ஹம்து சூரத்திற்குப் பின்னல் (ஆயத்தல் குரிசி) ஒரு விடுத்தமும் (சூரத்தல் இக்லாஸ்) அதாவது குல்ஹுவல்லா சூரத்தை மூன்று விடுத்தமும் ஓதி தொழுது முடிக்கவேண்டியது.

176453

## 8. எட்டு ரகாஅத்து நபில் தொழுகை

இதை நாலு நாலு ரகாயத்தாக ஒரே சலாம் கொண்டு தொழுகவேண்டியது. ஒவ்வொரு ரகாஅத்திலும் அல்ஹம்து சூராவுக்குப் பின்னால் (இன்ன அன்சல்ன) சூரத்தை ஒரு விடுத்தமும், (குல்ஹு வல்லாஹு) சூரத்தை 25 விடுத்தமும் ஓதி தொழுக வேண்டியது. (ரிவாயத்து) நாயகம் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். எவன் ஒருவன் இந்த தொழுகையை மேற்படி இரவில் தொழுகுவானுகில், அவனுடைய எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டு அவன் பாவத்தை விட்டும் தப்புரவானவனுகிவிடுவான் என்பதே.

## 2. இரண்டு ரகாஅத்து நபில் தொழுகை

ஒவ்வொரு ரகாஅத்திலும் (அல்ஹம்து, சூரத்துக்கு) பின்னல் ஆயத்துல் குர்சி, ஒரு விடுத்தமும், குல்ஹு வல்லா சூரத்தை பதினேந்து விடுத்தமும் ஓதி தொழுது சலாம் கொடுத்தபின், நூறு விடுத்தம் (தரூது) சலவாத்து ஓதவும், அதனால் (ரிஸ்கு) அன்னம், விஸ்தீரணமாகுதலும் வருத்தம், துன்பம் இவைகளை விட்டும் விடுதல் பெறுதலும், பாவத்தைவிட்டும் பிழை பொருத்தலும் உண்டாகும்.

## 4. நாலு ரகாஅத்து நபில் தொழுகை

இதை ஒரே சலாமில் தொழுது முடிக்கவும். ஒவ்வொரு ரகாஅத்திலும் அல்ஹம்து சூரத்துக்குப் பின் குல்ஹு வல்லா சூரத்தை 25 இருபத்தைந்து விடுத்தம் ஓதிதொழுது முடிக்கவும். இத்தொழுகையின் வரிசையினால் பாவங்கள் யாவற்றும் முடிவெண்ணெயில் சின்றும் வெளிப்படுவதுபோல் வெளிப்பட்டு விடும். இத்தொழுகை தொழுகிறவன் கியாம நாளையில் அவனுடைய முகப் பிரகாசமுடையவனுயிருப்பான்.

## 30. முப்பது ரகாஅத்து நபில் தொழுகை

15-பதினேந்து ரகாத்து இரண்டிரண்டு ரகாத்தாக தொழுக வேண்டியது. ஒவ்வொரு ரகாயத்திலும் அல்ஹம்து சூரத்துக்குப் பின்னால் (இன்ன அன்சல்னஹு) எனும் சூரத்தை ஒரு விடுத்தமும், (குல்ஹு வல்லாஹு) சூரத்தை மூன்று விடுத்தமும் ஓதித் தொழுது சலாம் கொடுத்தபின் இந்தத் துஆவை ஓதவும், லாயிலாஹ, இல்லல்லாஹு, வஹ்தஹு, லாஷரீகலஹு, சுப்ஹான்ல்லாஹி, வல்ஹம்துலில்லாஹி, வலாயில்லாஹ,

இல்லல்லர்ஹு, வல்லாஹு அக்பர், வலர்ஹௌவல்ல, வலா துவ்வித, இல்லாபில்லாஹில், அலியில், அலீம், அல்லா ஹும்மஸ்லலி, அலாஸையிதினு, முஹம்மதின், வபாரிக், வஸல்லிம், யாரப்பி, அஸ்அலுக, பீவஜ்ஹிகல், கரீம். இன்துந்த, கதப்தனி, பீஉம்மிக்கிதாபி, ஷகீயன், பம்ஹு, அன்னி, வஇன்குந்த, கத்தருத, அலெய்ய, ஸு அன்பஸ்ரிப்ஹு, அன்னி, வஅவிம்னி, இலஸ்ஸனதில், காபிலதீ, வஜ்அல்லி, நஸீபன், பீகுல்லி கைரின், கஸம்த, பைலு, இபாதிகஸ்ஸாலிஹீன்.

## அதன் பொருள்

நாயனே! நீ என்னுடைய பேரைக் கெட்டோர்களில் சேர்த்து எழுதியிருப்பேயாகில் அதை உன்னுடைய கிருபைக் கடாக்ஷத்தைக்கொண்டு அழித்துவிடு. இன்னும் எனக்கு தக்தீரில் நீங்கை எழுதியிருந்தேயாகில் அதை என்னைவிட்டும் அகற்றிவிடு. மறு வருடம் வருகிறவரையில் வரும் துன்பம் பலாய் முசீபத்துகள் வந்தணுகாமல் காத்தருள். இன்னும் எந்த ஒரு நன்மைகளை உன்னுடைய சாலிஹான அடியார்களுக்கிடையில் வகித்திருக்கிறாயோ அதில் எனக்கும் நசீபாக்கியருள். ஆகவே, இந்த இரவில் மூன்று விடுத்தம் யாசீன் சூரத்தை ஓதவும். ஒன்று முதவ் விடுத்தம் ஓதுகையில் வயது நீளமாகிற நீயத்துகொண்டும், இரண்டாம் விடுத்தம் ஓதுகையில், ரிஸ்கு விஸ்தீரணமாகிற நீயத்துக்கொண்டும், மூன்றும் விடுத்தம் ஓதுகையில் பலாய் முசீபத்துகளைவிட்டும், கார்மானம் தேடுகிற நீயத்துக்கொண்டும் ஓதவேண்டியது. இதன் பிறகு கீழ்க்கண்ட கலீமாவை ஓதவும். லர்யிலாஹு, இல்லல்லர்ஹு, வஹ்தஹு, வலாதஃபுது, இல்லா இய்யாஹு, முகீலீஸின், லஹுத்தீன, வலவ், காஹல், முஷ்ரிகூன்.

## அதன் பொருள்

வணக்கத்துக்குப் பாத்திரமானவன் யாருமில்லை. அல்லாஹுத்த ஆலா ஒருவனைத் தவிர, அவனன்றி நாங்கள் வேறு யாரையும் வணங்கமாட்டோம். நாங்கள் அவனுக்கே தீனை கலபருத்தலாக்கி வைத்தவர்களாயிருக்கின்றோம். அதை முஷ்ரீகீன் வகுப்பைச் சேர்ந்தவர்கள் பொருத்த கெட்டாலும் சரி முஷ்ரீகீன் என்னும் பதத்துக்கு பொருள் இணை வைத்து வணங்கியவர்கள் என்பதாகும்.

## 100 ரகாஅத்து நபில் தொழுகை

50 ஐம்பது ரகாத்து இரண்டிரண்டு ரகாத்தாக தொழுக வேண்டும். ஒவ்வொரு ரகாஅத்திலும் அல்ஹம்து சூரத்துக் குப்பின் குல்ஹுவல்லாஹு சூரத்து 10 பத்து விடுத்தம் ஒதி தொழுகவேண்டியது. இதேவிதமாக 50 ஐம்பது ரகா அத்து தொழுகவும் ரிவாயத்து வந்திருக்கிறது. நாயகம் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுடைய அசுஹாபுகளில் மூப் பது ஸஹாபிகளைத்தொட்டும் ரிவாயத்து செய்யப்பட்டிருக் கிறது. யாதெனில், எவனொருவன் இந்த பராத்து இரவில் இத்தொழுகையை தொழுகுவானுகில் அல்லாஹுத்த ஆலா அவனை 70 எழுவது விடுத்தம் கிருபையை கொண்டுபார்க்கி ருன். அவன் ஒவ்வொரு தடவை பார்க்கும்போதெல்லாம் அத் தொழுகை தொழுபவனுடைய ஒவ்வொரு ஹாஜத்தும் நிறைவே றிவிடுகின்றன. இந்தத் தொழுகையை தொழுதுவருவது முஸ்த ஹப்பாயிருக்கும். இன்னும் நாயகம் செய்யிதினு அப்துல் காதிறு ஜெயிலானி கத்தஸல்லாஹு விற்றஹு அவர்கள் தங் கள் சொந்த கோர்வையாகிய (குன்யத்துத் தாலிபீன்) என்கிற கிதாபில் சொல்லுகிறார்கள். யாதெனில், ஒருவன்இத்தொழுகை யைத் தொழுதுவருவானுகில்அதன்பரக்கத்தால்அவனின் எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டு அல்லாஹுத்த ஆலாவின் கிரு பையும் வரிசையும் பெற்றவனுகிவிடுவான் என்று,

## தஸ்பீஹ் தொழுகை

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், தங் களின் சிறிய தகப்பனாகிய ஹஸரத் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து, எனது அதிகப் பிரியமுள்ள சிறிய தந்தையே நான் உங்களுக்கு நீங்கள் முன்னுல் செய்த, பின்னுல் செய்த, பழைய, புதிய, சிறிய, பெரிய, பஹிரங்கமா கச் செய்த, ரகசியமாகச் செய்த எல்லாப் பாபங்களும் மன்னிக் கப்படும்படியான ஒரு தொழுகையை அறிவிக்கிறேன். நீங்கள் தஸ்பீஹ் தொழுகையைத் தொழுதுகொள்ளுங்களென்றுசொன் னர்கள். அதாவது, நான்கு ரக்கஅத்து நபில்தொழுகையாகும். ஒவ்வொரு ரக்கஅத்திலும் சூரத்து பாத்திஹாவுக்குப் பின் (உங்க

ளுக்கு) ஞாபகமுள்ள எந்த சூரத்தையாவது ஓதவேண்டியது. ஓதி முடிந்தபின் கியாமில், ஸுபுஹானல்லாஹி, வல்ஹம்து லில்லாஹி, வலாஇலாஹ, இல்லல்லாஹு, வல்லாஹு அக்பர் என்று 15 தரமும் ருகூவில் வளமையாய் ஓதும் தஸ்பீருக்குப்பின் 10 தரமும் (இஅதிதாலென்னும்) சிறு கியாமில் சமிஅல்லாஹு லிமன் ஹமிதா ரப்பனா ரகல் ஹம்த் என ஓதியபின் 10 தரமும், சுஜூதில் தஸ்பீஹு ஓதியபின் 10 தரமும், நடு இருப்பில் 10 தரமும், 2-ம் சுஜூதில் 10 தரமும், இஸ்திராஹத்ததென்னும் சிறு இருப்பில் 10 தரமும், மேற்படி கலிமாவை ஓதவேண்டியது. ஒவ்வொரு ரகஅத்திலும் ஆக மொத்தம் தஸ்பீஹு 75 விதித்தமாகிறது. இதுபோலவே பாக்கியுள்ள மூன்று ரக்கஅத்துகளிலும் மேற்படி தஸ்பீஹை ஓதவேண்டும்.

இத்தொழுகையைக் கூடுமானல் தினந்தோறும் தொழவும். இல்லாவிட்டால் ஒவ்வொரு ஜும்ஆவிலும், அதற்குமியலாவிட்டால் மாதம் ஒருமுறை, அதற்குமியலாவிட்டால் வருஷமொரு முறை, அதற்குமியலாவிட்டால் வயதில் ஒருமுறை தொழ வேண்டும். இத்தொழுகைகளின் பரக்கத்தினல் அல்லாஹுத்த ஆலா எல்லாப் பாபங்களையும் மன்னித்து ஈமானுடன் சலாமத்தாக்குவான்.

## துஆக் கேட்கும் முறைகள்

துஆக் கபூலாகுவதற்குப் பல ஷர்த்துக்கள்பின்வருமாறு:— உள்ளச்சத்துடனும் சாளயப்பாட்டுடனும் துஆக் கேட்கவேண்டும். துஆவாகிறது. இபாதத்தின் மூளையாயிருக்கும் என ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கூறியிருக்கிறார்கள். இதன் காரணம் யாதெனில், வணக்கம்தான் இபாதத்தின் நோக்கம். அடியான் தன்னுடைய இயலாமையையும், அல்லாஹுத்த ஆலாவின் வலுப்பத்தையும் பார்த்து உணறுவதிலேயே வணக்கம் இருக்கிறது. துஆ கேட்பதில் இவ்விரு விஷயங்களுமிருக்கின்றன.. எவ்வளவு அதிகமாகச் சாளாயப்பட்டு துஆக் கேட்கிறுனே அந்தமட்டில் துஆக் கபூலாக மிக்க பாத்தியமான்தால், துஆ கேட்கும்பொழுது இரண்டு கையையும் எடுத்துத் துஆ முடியும்பொழுது தன்னுடைய முகத்தின்மீது தடவிக் கொள்ளுவது ஆகிய இவ்விரு விஷயங்களையும் கவனிக்கவேண்

டும். ஏனெனில், (ஹதீஸ் ஷரீபில்) 'அல்லாஹுத்தஆலா' மிக்கப் பெரிய தயாளன். அவனுடைய சமுகத்தில் ஒருவன் கையை நீட்டினால் அதைக் காலியாகத் திருப்பமாட்டான். துஆவில் பூரண நம்பிக்கையிருக்கவேண்டும். துஆக் கபூலாகிவிடும். "உங்களுடைய துஆ நிச்சயமாகக் கபூலாகிவிடுமென்ற நம்பிக்கையுடன் நீங்கள் அல்லா இடத்தில் துஆக் கேளுங்கள்" என நபி நாயகம் (ஸல்) திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள். மிகவும் பயபக்தியுடன் ஒரு மனதுடன் துஆக் கேட்கவேண்டும். அடிக்கடி துஆக் கேட்கவேண்டும். துஆவுக்கு முதலிலும் பின்னாலும் தஸ்பீஹ் ஸலவாத்து ஓதவேண்டும். ஏனெனில், நபி நாயகம் (ஸல்) வர்கள் துஆவுக்கு முன் 'சுப்ஹான் ரப்பியல் அஃலல் வஹ்ஹாப்' என ஓதி இருக்கிறார்கள். துஆவுக்குமுன் ஒருவன் தரூத் (ஸலவாத்து) ஓதுவானால் அவனுடைய துஆக் கபூலாகுமென நாயகம் சொல்லியிருக்கிறார்கள். துஆ கேட்கு முன் தௌபாச் செய்து அவன் பக்கமாகத் தன்னுடைய மனதைச் சேர்க்கவேண்டும். ஏனெனில், துஆக்கள் கபூலாகாமலிருப்பதற்குப் பெரும்பாலும் துஆக் கேட்பவர்களின் மறதியும், பாபங்களுமே காரணங்களாயிருக்கின்றன.

குறிப்பு:—பராஅத் இரவில் எல்லா முஸ்லிம் ஆண்களும், பெண்களும் கண்களுக்கு சுர்மா இடவேண்டும். வலது கண்ணுக்கு 3-தரமும் இடது கண்ணுக்கு 2-தரமும் விடவேண்டும். அதனால் அவ்வருஷம் முழுவதும் கண்வலி வராது. கண் அதிகப் பிரகாசமுள்ளதாயிருக்கும். இரவில் வணங்கும் இபாதத்துகளில் சோம்பல் ஏற்படாது.

எ. அப்துல்கரீம்,
கரீம்பீடித் தொழிற்சாலை சொந்தக்காரர்,
மதராஸ்.

கரீம்பீடி பிரஸ், மண்ணடி, மதராஸ்.